ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1871/32 - 2014 ජූලි මස 16 වැනි බදාදා - 2014.07.16

*1871/32 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம்***

*ஊவா மாகாணத்தின் மாகாண சபை*

***10 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்***

*மேற்கூறப்பட்ட மாகாண சபைக்கு அந்த மாவட்டத்தினுள் அமைந்துள்ளதும், இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டதுமான நிருவாக மாவட்டங்களிலிருந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்படவுள்ளன என (இதனகத்துப்பின்னர் 'சட்டம்' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.*

*2. இத்தேர்தலில் இங்கு I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய நிருவாக மாவட்டம் ஒவ்வொன்றுக்கும் அங்கீகரிக்கப் பட்ட அரசியற்கட்சியினால் அல்லது சுயேச்சைக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படவேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கை இதற்கான அட்டவணையின் II ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறித்துரைக்கப்பட்டவாறாதல் வேண்டும்.*

*3. பெயர் குறித்த நியமனப்பத்திரங்கள், 2014 யூலை மாதம் 30 ஆந் திகதி ஆரம்பித்து 2014 ஓகத்து மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முடிவடைகின்ற 'நியமனக் காலப்பகுதியின்போது' அலுவலக நேரங்களில் எந்நேரத்திலும் இதற்கான அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த பதிவில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் உரிய தெரிவத்தாட்சி அலுவலர்களினால் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*4. சுயேச்சை வேட்பாளர்களாகப் போட்டியிட விரும்புகின்ற எவரேனும் ஆட்களைக் கொண்ட ஒரு குழுவிருப்பின், சட்டத்தின் 14 ஆம் பிரிவின்பால் அவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. அப்பிரிவிற்கமைய, ஒவ்வொரு சுயேச்சைக் குழுத் தலைவரும் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஒருவரும் பெயர்குறித்து நியமிக்கப்படுகின்ற ஒவ்வொரு வேட்பாளர் தொடர்பாகவும் இரண்டாயிரம் ரூபாய் (2000/-) வீதம் கணக்கெடுக்கப்பட்ட பணத்தை இவ்வறிவித்தல் பகிரங்கப்படுத்தப்படுகின்ற திகதி மற்றும் மேற் குறித்த நியமனப் பத்திர கால எல்லைக்கு நேர்முந்திய நாள் (அதாவது 2014 ஓகத்து மாதம் 05) நண்பகல் 12.00 மணி வரையிலான காலப்பகுதிக்குள் தெரிவத்தாட்சி அலுவலரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.*

*5. விதித்துரைக்கப்பட்ட படிவத்திலான நியமனப்பத்திரங்களை நியமனக் காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து கட்டணமேதுமின்றிப் பெற்றுக்கொள்ளலாம்.*



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*6. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும், சுயேச்சைக் குழுக்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களும், வேறுபடுத்திக்காட்டும் இலக்கங்களும் 2014 ஓகத்து மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12 மணியின் பின் உடனடியாகத் தெரிவத்தாட்சி அலுவலர்களினால் மாவட்டச் செயலகம் ஒவ்வொன்றிலும் பிரித்தொதுக்கப்படும்.*

*மஹிந்த தேசப்பிரிய,*
*தேர்தல்கள் ஆணையாளர்.*

*தேர்தல்கள் செயலகம்,*
*சரண மாவத்தை,*
*இராஜகிரிய,*
*2014, யூலை 16.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| நிருவாக மாவட்டத்தின் பெயர் | ஒவ்வொரு பெயர்குறித்த நியமனப்பத்திரத்திலும் தரப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை | பெயர்குறித்த நியமனப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளும் அலுவலரும் இடமும் |
| பதுளை | 21 | தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம் (கச்சேரி), பதுளை. |
| மொணராகலை | 17 | தெரிவத்தாட்சி அலுவலர், மாவட்டச் செயலகம் (கச்சேரி), மொணராகலை. |

*8-134*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.